2007 மே 14]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(இ) பல்கலைக்கழகங்களின் ஆட்சிக் குழுவிற்கு (Syndicate) உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. அண்ணா பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி மற்றும் அண்ணா பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் ஆகிய பல்கலைக்கழகங்களின் ஆட்சிக் குழுவிற்கு (Syndicate) கீழ்க்காணும் சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்து முறையாக வேட்பு மனுக்கள் வரப்பெற்றுள்ளன:

1. அண்ணா பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி - மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. காமராஜ்.

2. அண்ணா பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன்.

தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையும், முறையாக வரப்பெற்றுள்ள வேட்பு மனுக்களின் எண்ணிக்கையும் சமமாக இருப்பதால், வேட்பு மனு அளித்த சட்டமன்ற உறுப்பினர்கள் இருவரும் அந்தப் பதவிகளுக்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளதாக அறிவிக்கிறேன்.

தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்களின் பதவிக் காலம் 3 ஆண்டுகளாகும்.

தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் ஏதாவதொரு காரணத்திற்காக பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால் அந்த நாளோடு

[பேரவைத் தலைவர்] [2007 மே 14

அவருடைய ஆட்சிக் குழுவின் உறுப்பினர் பதவியும் முடிவடையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஈ) பேரவைக் குழுக்களுக்கான உறுப்பினர்கள் தேர்வு

(அ) மதிப்பீட்டுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. *2007-2008* ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவிற்கு (Committee on Estimates) பேரவையின் பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். கீழ்க்காணும் பதினாறு உறுப்பினர்களிடமிருந்து முறைப்படியான வேட்புத்தாள்கள் வரப்பெற்றுள்ளன:

1. திரு. வ. முல்லைவேந்தன்
2. திரு. எஸ்.பி. ஜெயராமன்
3. திரு. சை. சையது கௌஸ் பாஷா
4. திரு. எம். பன்னீர்செல்வம்
5. டாக்டர் ஆஸ்கார் சி. நிக்லி
6. திரு. சி. சண்முகவேலு
7. திரு. பி. தங்கமணி
8. திரு. இ. மகேந்திரன்
9. திரு. கோ. அரி
10. திரு. கோவை தங்கம்
11. திரு. கு. ஹசன் அலி
12. திரு. ராம. சுப்புராம்
13. திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்
14. திரு. சி. கோவிந்தசாமி
15. திரு. வை. சிவபுண்ணியம்
16. திரு. வீர. இளவரசன்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS